**சுருக்கம்**

திட்டங்கள் – மத்திய அரசுத் திட்டம்_– இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்தின் கீழ் கட்டப்படும் தொகுப்பு வீடுகளுக்கான ஓர் அலகிற்கான உதவித் தொகையை ரூ.60,000/–லிருந்து ரூ.75,000/– ஆக உயர்த்துதல் மற்றும் கூடுதல் செலவினம் ரூ.154,40,85,000/– – ஒப்பளிப்பு செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி.1) துறை

**அரசாணை நிலை எண்:90** **நாள்: 30.8.2010**

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.59 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மஅதி.1) துறை நாள் 25.5.2010.
2. அரசாணை (நிலை) எண்.87 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மாஅதி.1) துறை நாள் 20.8.2010.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் க.எண்.24498.2010.ஐஏஒய்.1, நாள் 16.8.2010.

-------

ஆணை:

முதலாவதாகப் படிக்கப்பட்டுள்ள அரசாணையில், 1.4.2010 முதல் இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்தின் கீழ் வீடுகளுக்கான அலகுத்தொகை சாதாரண தரை / மலைப்பகுதி/கடின தரை போன்ற அனைத்து வகையான நிலங்களிலும் கட்டப்படும் வீடுகளுக்கும் ஒரே அளவாக, மொத்தம் (வீடு ஒன்றிற்கு) ரூ.60,000/– ஆக நிர்ணயித்து ஆணையிடப்பட்டுள்ளது.

2. அதன் பின்னர் மாநில அரசின் திட்டமான கலைஞர் வீடு வழங்கும் திட்டத்திற்கான அலகுத் தொகையினை ரூ.60,000/–லிருந்து ரூ.75,000/– ஆக உயர்த்தி இரண்டாவதாகப் படிக்கப்பட்டுள்ள அரசாணையில் ஆணையிடப்பட்டுள்ளது. ‘‘இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டமும்’’ ஏழை எளிய மக்களுக்காக செயல்படுத்தப்படும் ஒரே மாதிரியான திட்டம் என்பதாலும், இவ்விரு திட்டங்களின் கீழ் கட்டப்படும் வீடுகளுக்கான வீட்டின் பரப்பளவு 20 சதுர மீட்டர் என ஒரே அளவாக இருப்பதாலும், பயனாளிகளே வீடுகளைக் கட்டிக் கொள்வதாலும், கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தின்கீழ் அலகுத்தொகையை ரூ.75,000/– என அதிகரித்தது போன்று இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்திற்கு அரசு வழங்கும் மான்யத் தொகையான ரூ.15,000/–ஐ, ரூ.30,000/–ஆக அதிகரித்து, அலகுத் தொகையை ரூ.75,000/–என நிர்ணயிக்கலாம் என்றும் அவ்வாறு நிர்ணயிக்கும் போது கூடுதலாக ஒரு வீட்டிற்கு ரூ.15,000/– வீதம் 1,02,939 வீடுகளுக்கு ரூ.154,40,85,000/– கூடுதலாக நிதி ஒதுக்குமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், மூன்றாவதாகப் படிக்கப்பட்டுள்ள கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமாக ஆய்வு செய்து மாநில அரசின் திட்டமான கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தில் கட்டப்படும் வீடுகளைப்

போன்றே இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்ட வீடுகளின் பரப்பளவு உள்ளதாலும், இத்திட்டத்தில் ஆதிதிராவிட இன மக்கள் பெருமளவில் பயன்பெறுவதையும் கருத்தில் கொண்டு அலகுத் தொகையினை உயர்த்துவது தொடர்பாக இயக்குநரின் செயற்குறிப்பினை ஏற்கலாம் என அரசு முடிவு செய்து பின்வருமாறு ஆணையிடுகிறது.

(i) **1.4.2010** முதல் இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீடுகளுக்கான அலகுத் தொகை சாதாரண தரை / மலைப்பகுதி / கடினத் தரை போன்ற அனைத்து வகையான நிலங்களிலும் கட்டப்படும் வீடுகளுக்கான அலகுத்தொகை (வீடு ஒன்றிற்கு) ரூ.75,000/– (ரூபாய் எழுபத்தைந்தாயிரம் மட்டும்) என நிர்ணயிக்கப்படுகிறது.

(ii) இதற்கான செலவினம் பின்வருமாறு மேற்கொள்ளப்பட வேண்டும்.

| | | |
|---|---|---|
| புதிய வீட்டிற்கான அலகுத் தொகை | | ரூ.75,000/– |
| இந்திரா நினைவுக் குடியிருப்பு திட்டத்தில் மத்திய அரசின் பங்கு | ரூ.33,750/– | |
| இந்திரா நினைவுக் குடியிருப்பு திட்டத்தில் மாநில அரசின் பங்கு | ரூ.11,250/– | |
| மொத்தம் | | ரூ.45,000/– |
| மாநில அரசால் கான்கீரிட் கூரை அமைப்பதற்காக கூடுதலாக வழங்கப்படும் நிதி | | ரூ.30,000/– |

(iii) 2010-11-ஆம் ஆண்டிற்கு கான்கிரீட் கூரை அமைப்பதற்கு மாநில அரசு மேலும் கூடுதலாக ரூ.15,000/– வழங்குவதால் ஏற்படும் கூடுதல் செலவினத்திற்காக ரூ.154,40,85,000/– (ரூபாய் நூற்று ஐம்பத்தி நான்கு கோடியே நாற்பது இலட்சத்து எண்பத்தைந்தாயிரம் மட்டும்) கூடுதலாக ஒப்பளிப்பு செய்யப்படுகிறது.

4. மேலே பத்தி 3 ((iii)–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம், கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படும்.

(i) **2216.** வீட்டு வசதி – **03.** ஊரக வீட்டு வசதி – **789** – ஆதிதிராவிடர்களுக்கான சிறப்பு கூறுகள் திட்டம் – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II. மாநிலத் திட்டம். JB. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு காங்கிரீட் வீடு கட்டும் திட்டம் – **09.** உதவித்தொகை – **02.** மூலதனச் செலவுக்கான உதவித் தொகை
(து.தொ.கு.எண். 2216–03–789–JB–0922) ரூ.92,64,51,000/–

(ii) **2216.** வீட்டு வசதி – 03. ஊரக வீட்டு வசதி – **800.** ஏனைய செலவு – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JA. ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வீடுகள் கட்டுவதற்கான திட்டம் – **09.** உதவித்தொகை – **02.** மூலதனச் செலவுக்கான உதவித் தொகை
(து.தொ.கு.எண். 2216–03–800–JA–0928) ரூ.61,76,34,000/–

கூடுதல் ரூ.154,40,85,000/–

5. மேலே பத்தி 3 (iii) – ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் “புது துணைப் பணி” ( New Instrument of Service) குறித்த செலவினமாகும். இதற்கான சட்டப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி, இச் செலவினம் முதலில் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து (Contingency Fund) முன்பணமாக பெற்று செலவிடப்படும். இதற்கான ஆணை நிதி (வரவு செலவு பொது 1) துறையிலிருந்து தனியாக வெளியிடப்படும். எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன் பணம் ஒப்பளிப்பு பெற உரிய படிவத்தில், இவ்வரசாணையின் நகலுடன் நிதி (வரவு செலவு பொது 1) துறைக்கு விண்ணப்பிக்குமாறு, இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் இச் செலவினத்தை துணை மானியக் கோரிக்கை 2010–11 (Supplementary Estimates 2010-11) – இல் சேர்க்கும் பொருட்டு உரிய செயற்குறிப்பினை உரிய நேரத்தில் நிதி (வரவு செலவு பொது 1) துறைக்கு அனுப்புமாறும் இயக்குநர் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித் துறையின் அ.சா. எண். 167/JS(PM)/10, நாள் 30.8.2010–இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேட்டு எண். 822 (எண்ணூற்று இருபத்து இரண்டு).

(ஆளுநரின் ஆணைப்படி)

கா. அலாவுதீன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை – 15.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (சென்னை நீங்கலாக)
அனைத்து திட்ட இயக்குநர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,
மாநில கணக்காயர், சென்னை – 6/18/35,
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை–9
பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை–9

நகல்
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர், சென்னை – 9.
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் முதுநிலை
நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதி (ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி )– (வரவு செலவு பொது I / II) துறை,சென்னை–9

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்